# ஆணையருக்கு அவஸ்தை...

# அள்ளித்தரும் மிரட்டல் கொளப்பாக்கம்



நிர்மல்குமார் ஐ.ஏ.எஸ்.

# போக்குவரத்துக்கு இரண்டு ஆணையரா?

போக்குவரத்து துறைக்கு, கனிமவளத்தில் இயக்குனராக இருந்த நிர்மல்ராஜ் IAS அவர்கள் கடந்த 12–06–2022ல் போக்கு வரத்திற்கு ஆணையராக பணியிடம் மாற்றப்பட்டார்.

அதே நேரத்தில் போக்குவரத்து துறை அதிகாரிகளிடத்திலும் மற்றும் கனிமவள அதிகாரி களிடத்திலும் நெருக்கமான தொடர்புகளில் இருந்த கொளப்பாக்கம் விஜயகுமாருக்கு என்னமோ, தலகால் புரியாமல், தடார், புடார் என தம்பட்டம் அடிக்காத குறையாக தனக்கு தொடர்பில் உள்ள போக்குவரத்துதுறையில் இருந்த பல அதிகாரி களையும் தொடர்பு கொண்டு, போக்குவரத்து துறைக்கு ஆணையராக வர உள்ள நிர்மல்ராஜ் IAS தன்னிடத்தில் இருந்த நெருக்கமான தொடர்புகள் பற்றி பெருமை பீத்தியுள்ளார் கொளப்பாக்கம் விஜயகுமார்.

இது உண்மையோ இல்லையோ ஆணையர் தான் இதற்குரிய விபரத்தை தெளிவு படுத்த வேண்டும். அல்லது விஜயகுமாரால் இப்படி பரப்பரையாக்கப்பட்டுவரும் தொடர்புகள் குறித்து, இனி ஆணையர் எடுக்கும் நடவடிக்கைகளை பொறுத்து, ஆணையர் நிர்மல்ராஜ் IAS நடந்து கொள்ளும் முறைகளை அறிந்தே அதன் நம்பக தன்மைகள் வெளிவந்துவிடும்.

நிற்க. இடையில் ஒரு சின்ன பிளாஷ்பேக். அதாவது விஜயகுமாரின் முன்கதை சுருக்கத்தை சற்று பார்த்து விடுவோம்.

இவர் குவாரிகளில் மாமுல் வாங்குவதும், மற்றும் கனிமவளங்களில் கொள்ளையடிப்பவர் களோடு கூட்டணி அமைத்தும், குவாரிகளில் கனிமவளங்களை ஏற்றும் டிப்பர் லாரிகளிடமும் மிரட்டல் மாமுல் வாங்குவது தான் இவரது வாடிக்கை.

(இதற்கு ஆதாரம்: கொளப்பாக்கம் விஜயகுமார் மிரட்டிய ஆடியோ, பதிவு.)

அதனால், கனிமவளத்துறை அதிகாரிகளிடம் எப்படி நெருக்கமோ அப்படி போக்குவரத்து துறை அதிகாரிகளிடமும், ஒரு நெருக்கத்தை ஏற்படுத்தி, தனக்கு அடங்காத டிப்பர் லாரி டீம்களுக்கும் ஓவர்லோடு அபாரதம் போடச் சொல்லி தன்னை வளப்படுத்திக்கொண்டிருந்தார் கொளப்பாக்கம் விஜயகுமார்.

மேலும்மோட்டார் வாகன அதிகாரிகளுக்கும் குறிப்பிட்ட அளவு ஒரு கமிஷன் லஞ்சமாக செல்கிற அளவுக்கு வருமானத்தையும் ஏற்படுத்தி தந்ததால் கரெப்ஷன் மோட்டார் வாகன அதிகாரிகள் பலரும் விஜயகுமாரின் மகுடிக்கு மயங்கிய நிலையில் தான் ஆடியுள்ளனர்.

மேலும்,மிக முக்கியமாக போக்குவரத்து

துறையில் உள்ள செயலாக்க பிரிவு அதிகாரிகளின் பணிகளில் குறுக்கிடுவதுதான் இவரது இலக்கு, பெரும்பாலும் இந்த அதிகாரிகள் எல்லாம் விஜயகுமாரின் பாக்கெட்டுக்குள் அடக்கம்.

ஏனெனில் செயலாக்க பிரிவு அதிகாரிகளது பணி நியமனங்கள் மிக குறைவு, பரந்து விரிந்த எல்லை களுக்கான பணிகளும், அவர்களது அதிகார எல்லைகளுக்குள் விரி வானது என்பதால் கொளப்பாக்கம் விஜயகுமாரின் கொள்ளைகளுக்கு அவரது இலக்கு இந்த போக்குவரத்து அதிகாரிகள் தான் முக்கியம்.



கந்தசாமி ஐ.பி.எஸ்.

பெரும்பாலும் போக்குவரத்து துறையில் ரெகுலர் பணியான ஒரு இடத்தில் உட்கார்ந்து பணம் பார்த்து விட்டு, தீடிரென தண்டனை மாற்றமாக செயலாக்க பிரிவிற்கு மாற்றப்படும் போது, கொளப்பாக்கம் விஜயகுமார் போன்ற மிரட்டல் கொள்ளையர்களது அரவணைப்பில், அந்த செயலாக்கப்பிரிவு அதிகாரிகளும் இசைந்து சென்று விட தோதுவாகிவிடுகிறது.

இப்படி போக்குவரத்து துறை ஒரு தண்டவாள கம்பியாக நீண்டாலும், மற்றொரு தண்டவாள கம்பியாக கனிமவளத்துறை அதிகாரிகளையும் கையில் வைத்து, குவாரி மற்றும் டிப்பர் லாரிகளிடம் மாமுல் வாங்கி கொண்டும், கொளப்பாக்கத்தின் விஜயகுமாரது லஞ்சம் என்கிற தொடர்வண்டி சுலபமாக போய் கொள்ள அதற்குரிய வழிகளை அமைத்து வைத்துள்ளார் கொளப்பாக்கம் விஜயகுமார்.

அதேபோல் இரண்டு துறைகளிலும் தொடர்புகளை கொண்டிருந்த விஜயகுமார், தனக்கு சாதகமாக உள்ள அதிகாரிகளை ஒரு வகையாக உபயோகித்து ஆதாயம் தேடிக் கொண்டார். அதே நேரத்தில், இவரது மிரட்டலையும், இவரது அதிகார துஷ்பிரயோகத்தை கண்டித்த பல நேர்மையான அதிகாரிகளின் மீது இவரே பகைகளை உருவாக்கி கொண்டதோடு, அவர்களை பற்றி மொட்டை பெட்டிஷன்களை அனுப்பியும், தவறான அவதூறு களையும் உயர் அதிகாரிகளிடத் தில் கூறி பல தொல்லைகளையும் அந்த நல்ல அதிகாரிகளுக்கு அளித்து வந்துள்ளதாகவும் ஒரு பேச்சு நிலவி வருகிறது.

இப்படியொரு நிலையில் நிர்மல்ராஜ் IAS போக்குவரத்து துறைக்கு ஆணையராக பதவி ஏற்கிறார் என்ற உத்தரவு வந்ததும், விஜயகுமாரின் பரப்புரைகளே பலருக்கும் 'கிலி'களை ஏற்படுத்தி விட்டது.

அதனால்தான், சென்னையில் உள்ள பல RTO அதிகாரிகளும் விஜயகுமாரை சந்தித்து பொன்னாடை போற்றி அவரிடம் ஆசி வாங்கி விட்டு சென்றுள்ளனர். இது என்னடா கொடுமை என நாம் கேட்டு முடிப்பதற்குள் போக்குவரத்து RTO அதிகாரிகள் பணியிட மாற்ற உத்தரவுகளில் கூட விஜயகுமார் ஒரு பட்டியலை ஆணையரிடம் கொடுத்துள்ளதாகவும் கூறப்படுகிறது.

அதில் அரசு பணியாளர்களுக்கானவிதிகளை மீறி, பணியிட மாற்றம் வழங்குவதற்கான ஒரு பட்டியல்கள் விஜயகுமார் தரப்பில் இருந்து கொடுக்கப்பட்டு ஆணையரை வற்புறுத்தி வருவதால் போக்குவரத்துக்கு இரண்டு ஆணையரா என்ற கேள்விகள் எழும் சூழ்நிலை களும் எழுகிறது என்கின்றனர் போக்குவரத்து உயர் அதிகாரிகள்.

அதே போல், ஒரு கோடி லஞ்சம் கொடுத்து (பார்க்க: பூங்குழலி வாகனத்தின் மீது விபத்து FIR இருக்கிறபோது எப்படி பதவி உயர்வை இந்த போக்குவரத்து துறை வழங்கியது) முறைகேடாக RTO – பதவியை எட்டிப் பிடித்த அதிகாரியான பூங்குழலிக்கு செங்கல்பட்டு அல்லது ஸ்ரீபெரும்புதூர் குன்றத்தூர் ஆகிய பகுதிகளில் ஏதாவது ஒன்றை வழங்க வேண்டும் என கொளப்பாக்கம் விஜயகுமாரின் கோரிக்கையாம்.


இப்படி கொளப்பாக்கம் விஜயகுமாரின் பேச்சுக்கள் எங்கும் பரவும்படி செய்து நேர்மையான அதிகாரியான நிர்மராஜ் IASக்கு களங்கம் ஏற்படுத்தி வருவதோடு, தன்னை பற்றி சம்பந்தப்பட்ட துறை அதிகாரிகள் பேசி கொண்டே இருந்தால் தனது மிரட்டல் வசூலுக்கு சுலபம் என்பது விஜயகுமாரின் பிளான் ஆக இருக்கிறது. இப்படி முறைதவறான பேச்சுக்கள் மற்றும் ஆணையரிடம் தனக்கு உள்ள நெருக்கத்தை வேறு மாதிரியாக பில்டப் காட்டிவரும் கொளப்பாக்கம் விஜயகுமாரின் தில்லாலங்கடி வேலைகளே ஆணையரின் அதிரடிகளுக்கு களங்கத்தை ஏற்படுத்தும் என்பதால் அதுவே ஆணையரின் பணியிட மாற்றத்திற்கு கூட ஒரு




பூங்குழலி MVI

வித்தாக அமைந்துவிடும். அதற்கு காரணமும் இனி கீழே உள்ள பதிவுகளில் வரும் விஜயகுமாரின் இந்த உளறல்கள்தான்.

மேலும், ஊழல் தடுப்பு துறையில் உள்ள அதிகாரிகள் தனக்கு மிக நெருக்கம் என்றும், நான் அங்கு சென்றாலே அந்த அலுவலக கதவுகள் உடனே திறக்கும் என்றும், தன்னை பில்டப் செய்து கொள்வதோடு, எனக்குரிய ஆதரவான RTO அதிகாரிகள் மற்றும் என்னிடம் ஆசி பெற்ற MVI–க்களின் பெயர் பட்டியல் களையும் நான் விஜிலென்ஸின் மேலதிகாரிகளிடம் கொடுத்து நல்லதொரு உறவை ஏற்படுத்தித் தருவேன். அதே நேரத்தில் என்னிடம் இணக்கமாக போகாதவர்களின் பெயர்களையும் நான் ஏற்கனவே கொடுத்து வைத்துள்ளேன். ஆகையால் என்னோடு இணக்கமாக உள்ள நீங்கள் யாரும் எதற்கும் கவலைப்படாதீர்கள், என தனக்கு சால்வை போட வந்த RTO அலுவலக அதிகாரிகளிடத்தில், ஆசிகளை வழங்கி விட்டு, தனது பில்டப்களை ஏற்றிவருகிறார் என்ற செய்திகள் மோட்டார் வாகன அதிகாரிகளிடம் இருந்து வெளி வந்து கொண்டே உள்ளது.





அதே நேரத்தில் விஜயகுமார் உளறுவதுபோல் விஜிலென்ஸ் அதிகாரிகள் எல்லாம் இவரது ஊழல்களுக்கும் மிரட்டல்களுக்கும் ஒத்துவரக்கூடிய ஊழல் அதிகாரிகள் இல்லை என்பதுதான் உண்மை.

எனவே, விஜிலென்ஸ் அலுவலகத்தையும், தனது கட்டுக்குள் வைத்திருப்பதாகவும், விஜிலென்ஸ் அலுவலகத்தில் இருக்கும் உயர் அதிகாரிகளை எல்லாம் ஊழல் அதிகாரிகளாக விஜயகுமாரால் சித்தரிக்கப்பட்டு வருவது எல்லாம் ஆணித்தரமான பொய் என்பதை RTO அதிகாரிகள் அறிந்து கொண்டால் சரி.

மேலும், நிர்மல்ராஜ் IASக்கு பணியிடமாற்றம் வந்ததும் அவரே கொளப்பாக்கம் விஜயகுமாருக்கு, கைப்பேசியில் பேசி, தனக்கு போக்குவரத்து துறைக்கு மாற்றப்பட்டதாக நிர்மல் IAS கூறினாராம். அடுத்து ‘‘தான் போக்குவரத்து துறையில் ஜாயின் பண்ணி விட்டேன். முதல்வரை மரியாதை நிமித்தமாக சந்திக்கப் போகிறேன்’’ என விஜயகுமாரிடம் கூறிவிட்டுத் தான் நிர்மல்ராஜ் சென்றார் என்று அவரது பெயரை ஒருமையில் உச்சரித்ததோடு அப்படியே பலரிடமும் விஜயகுமார் கூறி வருகிறாராம்.

அது மட்டுமல்லாது, முதல்வரை நிர்மல்ராஜ் சந்தித்தபோது, ‘‘முதல்வர் போக்குவரத்து துறை மிக மோசமாக உள்ளது. நீங்கள் தான் அதனை சீர்செய்ய வேண்டும் என கூறி அனுப்பியுள்ளார் அதனை அங்கிருந்தபடியே என்னிடம் (விஜயகுமாரிடம்) கூறிவிட்டு அமைச்சர் சிவசங்கரையும் பார்த்து விட்டு அவரிடமும் முதல்வர் கூறியதை அடிபிறழாமல், அச்சுபிசகாமல் அப்படியே அதாவது போக்குவரத்து துறை மிக மோசமாக உள்ளது. அதனை நீங்கள் தான் சீர்செய்ய வேண்டும் என முதல்வர் என்னிடம் கூறியுள்ளார் என அமைச்சரிடமே (அமைச்சர் நோகும் அளவுக்கு) நிர்மல்ராஜ் IAS கூறியதையும், என்னிடம் உடனே எனது கைப்பேசியில் பேசி எனது லைனுக்கு வந்து பகிர்ந்து கொண்டார் என கூறி வருவதோடு, தனது பில்டப்களை ஏற்றி, தனக்கும், நிர்மல்ராஜ் IASக்கு உள்ள நெருக்கத்தை மிக தவறாகவே கூறிவந்ததையே எழிலக கேன்டீன் வட்டார செய்தியாக வலம் வருவதோடு, மோட்டார் வாகன அதிகாரிகள் மற்றும் எழிலக வளாகத்திலும் ஒளித்து வருகிறது.

எனவே, அதிரடியான ஆணையர் ‘தான்’ பதவி மாறியதில் இருந்து அமைச்சரை சந்தித்தது வரை என்ன நடந்தது என்பதை நமக்கு வந்த தகவல்கள் மூலம் அப்படியே நாம் பதிவிட்டிருந்தாலும் .அந்த உண்மைகள் சம்பந்தப்பட்டவர்களுக்கு மட்டுமே தெரியும் என்பதால், விஜயகுமாரின் உளறல்களை தீர்மானம் செய்து, வரும் காலங்களில் ஆணையர் மற்றும் துறை அதிகாரிகள் அனைவரும் இந்த பொல்லாத விஜயகுமாரிடம் இருந்து உஷாராகி கொள்வது நல்லது.இல்லையேல் போக்குவரத்து துறைக்கு இரண்டு ஆணையர்களாக ஆகிவிடும். அதற்கு கொளப்பாக்கம் விஜயகுமாரின் அந்த மிரட்டல் ஆடியோவே மிகப்பெரும் உதாரணமாக

இருந்தாலும், மற்றொரு நிகழ்வுகள் சென்னையில் உள்ள மோட்டார் வாகன அதிகாரிகள் மற்றும் உயர் அதிகாரிகள்வரை இந்த கொளப்பாக்கம் விஜயகுமாரை சந்தித்து ஆசி வாங்கி வந்ததும், இவரே ‘‘என்னை பற்றி RTO – ஆபிஸ்ல்ல போய் கேட்டு பாரு’’ என அந்த ஆடியோவில் கொக்கரித்து வந்ததும் அதற்கு சான்றாகும்.



பனீந்திர ரெட்டி ஐ.ஏ.எஸ்.



சிவசங்கர்

எனவே, விஜயகுமாரின் சங்கதிகளை உடனே சரி செய்யாவிடில் இனி போக்குவரத்திற்கு இரண்டு ஆணையர்கள் என்று சொல்வதிலும் எந்த தவறுகளும் இல்லை என்பதும் நிருபணம் ஆகிவிடும் எனவே ஆணையர் நிர்மல்ராஜ் IAS அவர்கள் வெளுத்தது எல்லாம் ‘பால்’ என நம்பாமல் உஷாராகி கொள்வதே நல்லது.

அதேபோல் கூடா நட்பு கெடாய் விளையும் என்பதற்கு மெத்த படித்த அதிகாரிகளும் உதாரணமாகிவிடுவது என்பது துரதிர்ஷ்டவசமானதுதான்.

மேலும், குவாரிகளில் இவரது கடுமையான மிரட்டல்கள் விடுத்த அந்த ஆடியோ பதிவில் உள்ள வாசகத்தை பாரீர் ‘ஏய்யா பிங்கர் பிரிண்ட் எடுக்க சொல்ற... என்னை யார்ன்னு தெரியலையா – உன் லைசன்ஸை எடுத்துட்டு வா..உன்னை மூணுவாட்டி எச்சரிக்கை பண்ணியிருக்கேன் நீ எந்த கிரஷர்காரன் உன் கிரஷரை மூடச் சொல்றேன். இனி நீ கிரஷரை ஒட்ட முடியாது; உன் ஒனரையே மூடச் சொல்றேன். இனி நீ கிரஷரை ஒட்டவே முடியாது நீ என்ன தைரியத்தில் வண்டிய எடுத்த ? கரெக்டா எடையை போடு, என்னையும் சேர்த்து எடை போடு, கொண்டா பில்லை. ஓவர்லோடு கேஸ் போடு, என்னை இடிக்கிற மாதிரி வண்டிய எடுக்குற, நான் யாருன்னு தெரியுமா ? போ... போயி RTO ஆபிஸ்ல போய் கேட்டு வா ? எந்த கிரஷர் காரண்டா நீ, அந்த ரோட்டுல நீ வண்டியே ஒட்ட மாட்டே, உன் வண்டிய காட்டி JTC, கமிஷனர் வரை புகார் போயிருக்கு, என் வண்டி நிக்கிற போது நீ எப்படி வண்டியை எடுக்குற, எவ்வளவு திமிர் இருக்கு,

*யோவ் தப்பு பண்ற நீ, நான் நிக்கிறேன், அவன் எடுக்குறான்னா எவ்வளவு திமிர் இருக்கும் அந்த டிரைவருக்கு அட சீ நான் நிக்கிறேன் அவன் எடுக்குறேன்னா எவ்வளவு திமிரா எடுக்குறான், எந்த தைரியத்தில் எடுக்குறான். நான் நிக்கிறேன்னா ஒரு லாரியும் மூவ் ஆகாது நீ நின்னா கூட பத்து வண்டி உன்ன பாக்கும், நான் நின்னா எல்லா வண்டியும் அப்படியே நிக்கும் நான் நிக்கிறேன் அவன் எந்த தைரியத்தில் வண்டிய எடுக்குறான். யோவ் ஒங்க ஒனர் வந்து தலைவரை பாக்கனும், கிரஷரை ஒட்டக்கூடாது சொல்லிடு, நான் யார்ன்னு தெரியுமா ? முதல்ல போயி RTO ஆபிஸ்ல போய் நான் யாருன்னு கேட்டு பாரு, நீ முதல்ல தலைவரை போய் பாரு, தலைவரை பார்க்கமா நீ இனி வண்டி ஒட்டக் கூடாது நான் டெய்லி உன்ன புடிச்சுடுவேன், நீ வண்டி ஒட்டவே முடியாது, என்ன தைரியத்தில் வண்டி எடுக்குறே எனக்கு ஒன்னுமே புரியலையே, அதுவும் என் எதிரில நீ வண்டி எடுக்கிறியே, எனக்குபிரஷர் ஏத்திட்டியே... இந்நேரம் 160, 180, எனக்கு ஏத்திருப்பியே... நாங்கதான் அசோசியன் தலைவரு, கிரஷர் அசோசியன் தலைவரு, பஞ்சாயத்து தலைவரு, லாரி அசோசியன் தலைவரு எல்லாம் நாங்கதான்’’ எங்களை மீறி நீ தொழில் பண்ணவே முடியாது.*

*நிப்பாட்டிட்டு போய்யிட்டே இருப்போம். நீ அங்க பாரஸ்ட்க்கு போனா பாரஸ்ட்டை விட்டு பிடிக்க சொல்லுவேன், அந்த ரோடு திரும்புனதும் பாரஸ்ட்டை விட்டு பிடிக்க சொல்வேன். RTO விட்டு பிடிக்க சொல்லுவேன், அங்கிட்டு போனா மைன்ஸ்–ஐ பிடிக்க சொல்லுவேன். நீ வாழவே முடியாது. உன் வண்டி நம்பரை கொடுத்துடுவேன், உன்னை பாரஸ்ட் வைச்சு பிடிச்சுடுவேன் டெய்லி உனக்கு ஒரு ஆள் போட்டடுவேன் உனக்கு ஒரு வாட்சரை போட்டுருவேன் என மிரட்டல்கள் தொடர்ந்தாலும், எதிரில் உள்ள லாரி ஒட்டுனர்களும், அந்த வாகனத்தின் முதலாளிகளும் விஜயகுமாரிடம் பவ்யமாக மன்னிச்சுடுங்க, தெரியாமல் நடந்துடுச்சு என பம்மி பம்மி தாழ்ந்த குரலில் பேசினாலும், விஜயகுமாரின் அடாவடி பேச்சு மட்டுமே எகிறி கொண்டே இருந்தது.* கட்சிகாரர்கள் தவறு செய்தாலே சர்வாதிகார நடவடிக்கையை தொடர்வேன் என எச்சரித்து வரும் முதல்வர்,

எதிரி கட்சியான ப.மா.க வை சேர்ந்த கொளப்பாக்கம் விஜயகுமாரின் இந்த மிரட்டலுக்கு குண்டர் சட்டம்தான் பாய வேண்டும் நடவடிக்கை பாயுமா ? முதல்வரும், காவல் அதிகாரியான வெள்ளத்துரை அவர்களும் கவனிப்பார்களா ? பொறுத்திருந்து பார்ப்போம்.

**நெல்லை கோபால்**
மூத்த பத்திரிகையாளர்
9994478389

13–07–2022